உ

சற்குருதாட்டுணை.

# மாரியம்மன்
# ஆனந்தக்கும்மி.



கமுதி **S. A.**

ரெத்தினசாமி பாண்டியன்

இயற்றி, வெளியிடப்பெற்றது.

மதுரை

ரவில் பதிப்பிக்கப்பெற்றது

1931 [விலை அணா 1

Q25:417
N31
186122

உ

சற்குருதுணை.

# மாரியம்மன் ஆனந்தக் கும்மி.

இஃது

யோகீஸ்வரர் வேதாந்தபாஸ்கரன், ஞானக்களஞ்சியம், யோகாகசியம் முதலான ஞானநூல்களின் ஆசிரியரும், ஞானசூரியன் பத்திரிகை கருணாநிதிப்பிரஸ் அதிபருமாகிய மகான் ஸ்ரீலஸ்ரீ

**கருணையானந்த ஞானபூபதியவர்கள்**

மாணவர்களிலொருவராகிய

கமுதி **S. A.**

**ரெத்தினசாமி பாண்டியன் அவர்களால்**

இயற்றியது

மதுரை

விவேகானந்தா பிரஸில் பதிப்பிக்கப்பெற்றது

1931

[...பிரைட்] [விலை அணா 1

உ

# மாரியம்மன் ஆனந்தக் கும்மி.

பாரிலுயர்மாரி யம்மன்பேரில் கும்மி
பாடிப்பெண்கள் விளை யாடுதற்கு
வீரிய மாயனைக் கூத்தாடச் செய்தயெம்
விகடச் சக்கரன் காப்பாமே.

மங்கள மோங்கிடுஞ் செங்கமலைவளர்
மாரியம்மன் கும்மி பாடுதற்கு
திங்களுங்கங்கை யணிந்திடுஞ் சங்கரன்
தேவியுமைபதங் காப்பாமே

அந்திபகலெந்த நேரத்திலும் மாரி
அம்பிகை மேற்கும்மிப் பாட்டுரைக்க
சிந்தையில் வந்தருள் தந்தருள்வாய் திருச்
செந்தூர் வடிவேலன் காப்பாமே

மண்டலமீதமர் மாந்தர் தினம் புகழ்
மாரியம்மன் கும்மிப் பாட்டுரைக்க
மிண்ட ரறிவுராத் தொண்டர்க் கருள்புரி
வெண்டா மரைமகள் காப்பாமே

18672

வாலைப்பருவம தானவெங்கள் குல
மாரியம்மன் பேரில பாடுதற்கு
ஆலிலைம திரு மாலின் திருவடி
அஞ்சலி செய்திடக் காப்பாமே

சத்திபராபரி யாய்மணியாம் மாரி
தாயகிச் செந்தமிழ்ப் பாட்டுரைக்க
கர்த்தனருள்பெற்ற ஞானியா மென்குரு
கருணையானந்தருங் காப்பாமே

நாட்டிற் சிறந்திடும் பாண்டி நகர் துரை
ராஜாக்கள் போற்றுங் கமலை நகர்
காட்டிக மாவளஞ் சங்கையைச் செப்பிட
ண்முக னம்பிகை காப்பாமே

ழை பலாக்கொய்யா மாவுங் கமுகும்
ளந்து படர்கின்ற தாமரையும்
ளையொழு கொழுகாக நிறைந்திடும்
ண்புருதென்னை மரங்களுமாம்

வுங்கிளியன்னம் பூங்காவனமுங்
குளமுஞ்செறிந்த கமலை நகர்
மேவும்மயில் குயில்மாடப்புரு சுற்றி
தாவிநின்றாடுஞ் சிங்கார நகர்

சென்னல் விளைவிதில் வால்மிளகியுடன்
சீரகச்சம்பா சிறுமணியன்
சொன்னயம் பெருகுஞ் சித்திரக்காலியும்
தோன்றுங்குறுவை மணல் வாரி

நன்னயமாகிய மட்டைநெல்லும் நம்
நாயகிக்குற்ற குழியடிச்சான்
இன்னம்பலவிதத் தானியங்கள் விளைந்
தெங்கும் புகழுங் கமலை நகர்

சங்கரன் கெங்காதரப்பெருமாள் சிவ
சண்முகன் தந்தி முகப்பெருமாள்
பங்கமிலாப்பள்ளி கொண்டிருமால் இவர்
பார்த்து மகிழும் வளத்தை நம்மால்

சொல்லியுரைக்கமுடியாது அல்லி
மல்லிகை முல்லை மலர்த்தோ
செல்லியரே வாருநில்லாது அம்பாள்
தேன்பொழில் வாசப்படிமீது

பக்கவரிசையின்கற்கள்மிச்சம் அதைப்
பார்க்கிற் பெரும்பொன்னே பத்துலக்ஷம்
மிக்கமரகதத் தூண்கள் சொச்சம் அதில்
மேக வைடூரிய மேமூலக்ஷம்

ஆரணி யாந்திரி சூலியராமிவ
ளாயிர நேத்திரக் காளியராம்
தாரணி சூரசம்மாரியராமன்னை
தாளடி போற்றியே பாடுங்கடி

சிங்கவாகனத்தி, லூர்பவடி சூல
கங்கையிவள்மகா மேருவடி
அங்குச சக்கர மாரியடி இவ
ளஞ்சலி கூறி யடியுங்கடி

துஷ்டரைச் சம்மாரஞ் செய்தவடி வீர
துற்கையெனுங் குலத் தெய்வமடி
கஷ்டந் தவிர்த்தென்றும் ஆள்பவடி மனங்
கசிந்து கும்மி யடியுங்கடி

பங்குனியுற்சவங் கொண்டவடி எங்கும்
பொங்கலலங்காரம் பெற்றவடி
சங்கையுடனே யடிபணிந்து மலர்
சாத்திக் கும்மி யடியுங்கடி

ஆட்டுக்கடாக்காவு கொண்டவடி பன
தன்புகூர்ந் தாட்கொள்ளு மாரியடி
சாட்டையின் கர்ச்சனைக் காரியடி அம்பாள்
சந்ததம் போற்றியே பாடுங்கடி

சாஸ்திர வேதங்க ளுற்றவடி கெட்ட
நாஸ்திகரைத் தொலைத் திட்டவடி
நேத்திர ரோகங்கள் தீர்ப்பவடி வாலை
க்ஷேத்திர மென்றுங்கொண் டாடுங்கடி

பாரினி லுற்சவங் கொண்டவடி போரிற்
சூரனுடலற விண்டவடி
கோருமகவாசை தன்னைக கொடுத்திடும்
கோமகள் மாரிமேற் பாடுங்கடி

கருணையா னந்த மகாமணியின்சொற்
கருதியென் னுளும் பதம்பணியும்
அருமையா ரெத்தினஞ் செந்தமிழ் பாடியே
ஆனந்தக் கும்மி யடியுங்கடி

## தங்கரேத்தினம் பொன்னுரேத்தினம் என்ற மெட்டு.

சீருயரு மாங்கமலை செல்வியெங்கள் தாயாமுத்து
மாரியம்மன் பேரில் தமிழைக் கூறக்குண நிதியே
வாக்கருள்செய் வேணுமிரு தாரக்கணபதியே

ஏழைக் கிரங்கிடுவாள் எங்கள்குல வம்பிகையாள்
காளைவாக னத்தமர்ந்த நங் கன்னிமுத்துமாரி
கார்மேகன் சோதரியாங் கமலைநகர்மாரி

வெள்ளியுஞ்செவ் வாய்களிலே வெகுஜனங்கள் கூட்டமடி
சொல்லிவரங் கேட்பவர்க்கு நம் கன்னிமுத்துமாரி
தெள்ளமுத மீய்ந்திடுவாள் கமலைநகர்மாரி

186172

ஆலயங் கொண்டவளாம் ஆயிரங் கண்ணுடையாள்
பாளையிலமர்ந்தவளாங் கன்னிமுத்துமாரி
பாலவடி வானவளாங் கமலைநகர்மாரி

பங்குனிமாதத்திலே பத்துநா ளுற்சவமாம்
பொங்கிவரும் மானிடர்க்குநம் கன்னிமுத்துமாரி
தங்கிவர மீய்பவளாங் கமலைநகர்மாரி

சங்கரி பராபரியாள் அங்குசபாச பரியாள்
தங்கநிற மேனியடி நம் கன்னிமூத்து மாரி
சங்கடங்கள் தீர்ப்பவளாங் கமலைநகர் மாரி

கங்குகரை யில்லையடி பொங்கலிடும் வேல்விழியர்
மங்கள விநோதியடி நம் கன்னிமுத்துமாரி
திங்களிளங் கோமதியே கமலைநகர்மாரி

பொற்கரகச் செம்பெடுத்து பிள்ளைவிளையாடிவர
நற்கிரகம் பாலித்திடும் கன்னிமுத்து மாரி
துற்கை ரண சூலியே நம் கமலை நகர் மாரி

பழிபாவச் செயல்கள்மிகப் பார்மீதி லோங்கிடாது
பழிதீர்த்துப் பவமகற்றும் கன்னிமுத்துமாரி
கலிக்குலுயர் மெய்புடையாள் கமலைநகர்மாரி

சிங்கவாகனத்தமர்ந்த மங்களசொரூபியவள்
கங்காதரன் பாரியுமை கன்னிமுத்துமாரி
பைங்கடம்பன் தாயடியே கமலைநகர்மாரி

'ரிரணசூரியடி வேப்பிலையி னுசனத்தி
ாரில்விளை யாடிவந்து நம் கன்னிமுத்துமாரி
நீரில்வினை தீர்ப்பவளாங் கமலைநகர்மாரி

ஆட்டுக்கடா காவுகொண்ட ஆயி வுமையவளே
சாட்டைகொண்டு பூவுலகில் கன்னிமுத்துமாரி
நாட்டமருள் தாயகமே கமலைநகர்மாரி

அக்கினியின் சட்டிகளும் ஆயிரங்கண் பானைகளும்
திக்குநிறைந் தாடல்கண்டு நம் கன்னிமுத்துமாரி
தக்கவர மீய்ந்திடுவாள் கமலைநகர்மாரி

மாவிளக்குப் பார்க்கவரும் மாதர்களோ கோடாகோடி
பூவிலலங்காரியடி நம் கன்னிமுத்துமாரி
வாவிவளஞ் சூழ்ந்தவளே கமலைநகர்மாரி

செப்புவெள்ளி பொற்கரகச் செம்புவிளை யாடிவரும்
ஒப்பிலுயர் மக்களுக்கு நம் கன்னிமுத்துமாரி
செப்புஞான வீடளிப்பாள் கமலைநகர்மாரி

ஆணிப்பொன் முத்ததனை யளந்துநகர் வீதிதனில்
காணிக்கையிடாதவர்க்கு நம் கன்னிமுத்துமாரி
மாணிக்கம்போல் வீசிடுவாள் கமலைநகர்மாரி

ஏற்ருர்க்கு ஏற்றமுத்து எளியவர்க்கோ மாரிமுத்து
பார்த்தாலும் பச்சைமுத்து கன்னிமுத்துமாரி
பாரெங்கும் நிறைந்தமுத்து கமலைநகர்மாரி

ஆயிரம்முத்ததனில் ஆணிமுத்தாய்க் கோர்த்திட்டாலும்
பாயிரம் மாலையுள்ளநம் கன்னிமுத்துமாரி
சேயிழையைக் காத்திடுவாள் கமலைநகர்மாரி

செங்கைவளை கொங்கையிளஞ் சேயிளை மின்ஞர்கள் கூ
மங்களநல் வாரமன்று கன்னிமுத்துமாரி
சங்கையுடன் பாலிசேர்ப்பார் கமலைநகர்மாரி

புந்திகுரு சுக்ரசனி போந்தஆதி திங்கள்வரை
சந்திர னுதையநேரம் கன்னிமுத்துமாரி
வந்துஜல மேதெளிப்பார் கமலைநகர்மாரி

மங்களநல் வாரங்கங்குல் மாதர்களணியணியாய்
தங்கமுளைப் பாலியிடுநம் கன்னிமுத்துமாரி
அங்கம்பூரித் தாதரிப்பாள் கமலைநகர்மாரி

வகைவகையாய் நக்ஷத்திர வர்ணவாணமும்ஜொலிக்கும்
ஜெகமகிழும் மெங்கள்குலக் கன்னிமுத்துமாரி
தேரிழுக்கும் பவனியன்று கமலைநகர்மாரி

கரக முதித்தவிடங் கண்ணனூர் மேடையம்மா
சரகமெல்லா மாடிவந்துநம் கன்னிமுத்துமாரி
சாபல்யமிங் கீ[illegible]க்கவுளாங் கமலைநகர்மாரி

உடுக்குச் செனித்ததம்மா ருத்ரகிரிமேருவினில்
துடுக்கடக்கி யாளவந்தநம் கன்னிமூத்துமாரி
துய்யதிரு மேனியராங் கமலைநகர்மாரி

கலிங்க தெலுங்கமூதல் கன்னடமராட்டியமூம்
தெளிந்துதவந் தாடிவந்தநம் கன்னிமுத்துமாரி
தீரசூர பார்வதியாங் கமலைநகர்மாரி

யாழ்ப்பாணங்கள் தேசமெல்லா மாற்பரித்த சங்கரியாள்
தோப்புநிறை நம்நகரில் கன்னிமூத்துமாரி
தாப்புநிலையானவளாங் கமலைநகர்மாரி

பூதிசிவன் மைந்தரொடு அம்மையுமை தான்வாழி
விலுயர் மானிடர்கள் கன்னிமுத்துமாரி
பொற்பதத்தாள் வாழியவே கமலைநகர்மாரி

மங்களம். மங்களம். மங்களம்.

முற்றுப்பெற்றது.

# விளம்பரம்

## எனதன்பார்ந்த ஐயன்மீர்

இரத்தினம் கம்பெனி சர்பத்களையே

ப்பூவுலகின் கண்ணே கண்ணியம்
க்கம் நிறைந்த புண்ணிய சீலர்காள் கமுதி S. A. இ
தினம் அன் கோ சர்பத்களே உல க
லெங்கினும் ந வ இரத்
ங்களாய் விளங்குகின்றன இச்சர்பத்களை பிரதிதி
உபயோகிப்பதால் உஷ்ணத்தினலேற்படு
பம் நீர்சுருக்கு மேகவெட்டை தா
சொர்ப்பனஸ்கலிதம் மலச்சிக்கல் உட
ங்கினும் நமைச்சல் முதலிய வியாதிகளை நீக்க இக்கம்
சர்பத்களே ஒப்புயர்வானது இமிடேஷன் கம்பெ
ர்பத்களனேக முள்ளன நாக
ப்பம் ஆடுகிறதைக்கண்ட நாகப்பூச்சி தானுமோர்ச
மெனஎண்ணி ஆட எத்தனிப்பதுபோலான போலிசர்
களின் கேலி இனிச்செல்லாது சர்ப
ளென்றல் எல்லாம் சர்பத் ஆகிவிடுமா சர்பத்
உபயோகித்து அதின் குண குணங்க
விரும்புநேயர்கள்கமுதிS.A.இரத்னம்கம்பெனிசர்பத்களை

இரத்தினம் கம்பெனி சர்பத்களையே

உபயோகியுங்கள்.

## S.A. இரத்தினம் அன் கோ.,

சர்பத் & வாசனைபுகையிலை பாக்டரி,
S. பஜார்,
கமுதி.

---

எங்கள் கம்பெனியாரால் V. E. V. & கம்பெனியாரால் தயாரிக்கப்பெற்ற அசல் நம்பர் சொக்கத்தங்க பிஸ்கட் தினுசுகளும், பட்டணம் பொடிகளில் பெயர்பெற்ற N. S. மாணிக்கம் பட்டணம் பொடியும் விலை சகாயமாய் விற்கக்கூடும்.